2010 மே 13] [டாக்டர் க. பொன்முடி]

இருக்கிறது, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே. மற்ற மாநிலங்களில் எல்லாம் அதுபோன்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய கோரிக்கையை நாம் அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், ஓரளவிற்காவது அதுகுறித்துக் கலந்துபேசி கிராமப்புறங்களிலே இருக்கிற மாணவர்களுக்குப் பயன்படுகிற வகையிலே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

(ஊ) ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளி நளினியை சிறையில் விஷம் வைத்துக் கொல்லப்போவதாக வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாட்களிலும், நேற்று மாலை செய்தித்தாட்களிலும் வேலூர் மத்திய பெண்கள் சிறையில் இருக்கக்கூடிய ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளி நளினி அவர்களுக்கு, சிறைத் துறை அதிகாரிகள் விஷம் வைத்துக் கொல்லப் பார்க்கிறார்கள் என்று அவர் புகார் அளித்தது பெரும் பரப்பரப்பாக எல்லா இடங்களிலும் செய்தியாக வந்துகொண்டிருக்கிறது. மனிதாபிமானம் இல்லாமல் எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொல்வது வேண்டுமானால், அவர்களது பண்பாக இருக்கலாமேயொழிய, இங்கே மனித நேயத்திற்கு உதாரணமாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறைத் துறை அதிகாரிகள், அவருக்கு விஷம் வைத்துக் கொன்றால், அவர்கள் அல்லவா குற்றவாளிகளாகிவிடுவார்கள்? இப்படி பொய்யான பிரச்சாரத்திற்கு இவ்வளவு விளம்பரம் வந்து கொண்டிருக்கிறதே, சிறைத் துறையில் ஏன் இப்படிப்பட்ட கசிவுகள் வெளியாவதற்கான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது? இது உண்மைதானா என்று அவைக்கு அறிவிக்குமாறு மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. சிவபுண்ணியம், திரும்பத் திரும்ப எழுந்திருக்காதீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கேட்டார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம் தயவு செய்து உட்காருங்கள். Kindly co-operate with the House. *(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அவர் நின்று கொண்டிருக்கட்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பெண்கள் சிறையில் இருக்கும் நளினி அவர்கள், தனக்குள்ள குறைபாடுகள் குறித்தும் நிர்வாகத்தின்மீது சில குறைகளைக் கூறியும் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அம்மனுக்களின்மீது அதே சிறைத் துறை அதிகாரிகள் முடிவெடுத்தால் அது ஒருதலைப்பட்சமாக இருக்குமென்று கருதி, கோயம்புத்தூர் மாவட்ட சிறைத் துறையினுடைய* D.I.G. *திரு. கோவிந்தராஜன் அவர்களும், வேலூர் ஆண்கள் சிறையினுடைய* Superintendent *திரு. சேகர் அவர்களும், புழல் பெண்கள் சிறையினுடைய* Jailer *அல்லிராணி ஆகியோரைக் கொண்டு 4–5–2010 அன்று ஒரு* Committee *அமைத்து, நளினி அவர்கள் கொடுத்திருக்கிற மனுக்களின்மீது ஆய்ந்து, உண்மை நிலையைக் கண்டறியும்படி தெரிவித்திருக்கிறோம். இன்னும் ஓரிரு நாட்களில் அந்த அறிக்கை கிடைக்கும்.*